Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 39/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பரமேஸ்வரன் (உதவி ஆய்வாளர்) |
| Father's Name | – | பழனிச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 08th November 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 present. A2 to A4 absent. 317 petition filed and allowed. A1 to A4 counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த 04.11.2016 ம் தேதி மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் பணியாற்றிய த.கா1672 திரு ஞானசுந்தரம் மற்றும் உதவி ஆய்வாளர் திரு மணிமாறன் ஆகியோர்கள் உடன் நான் பணியாற்றியுள்ளதால் அவர்களது கையெழுத்து எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 04.11.2016 ம் தேதி மகாலிங்கபுரம் காவல்நிலைய த.கா1672 திரு ஞானசுந்தரம் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த போது கோட்டாம்பட்டி அண்ணாநகரைச் சேர்ந்த முருகன் மனைவி சாந்தி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினைப் பெற்று நிலைய கு.எண்.201/2016 சட்டபிரிவுகள் 294(பி),323,324,,506(ii) இதச & Sec 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

அந்த முதல் தகவலறிக்கை **அசாஆ.4.** பின்பு புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.11.2016 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அம்மாவை மற்றும் காளிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன்.. அவை முறையே **அதசாஆ.5 மற்றும் அசாஆ.6** ஆகும். . பின்னர் சாட்சிகள் 1 முதல் 10 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் அசா.1 க்கு சிகிச்சை அளித்த பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு அழகப்பாசாமி அவர்களை விசாரித்து அவர் அளித்த வாக்குமூலத்தையும் விபத்து பதிவேட்டுடன் கூடிய சாதாரண காயச் சான்றிதழையும் பெற்றேன்.

பின்னர் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் அவர்கள் 21.12.2016 ம் தேதி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. பின்பு மேற்கட்ட புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு மணிமாறன் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரினை சாந்திதான் எழுதிக்கொடுத்தார். புகார்தாரர் மீது என்ன வழக்கு உள்ளது என்றால் ஆவணத்தைப் பார்த்தால்தான் தெரியும். இந்த வழக்கின் எதிரிகள் மீதும் அசா.1 ன் மீதும் எதிர் எதிர் வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் சாந்தி மீதுள்ள முதல்தகவலறிக்கையும் வழக்குக் குறித்து ஆவணத்தைப் பார்த்தால்தான் என்னால் கூறமுடியும். இவ்வழக்கின் புகார்தாரர் அசா.1 ன் மீதான போடப்பட்டுள்ள குற்ற வழக்கு எண்.200/2016 இக்குற்ற சம்பவம் தொடர்பாக

முதல்தகவலறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் அசா.1 அவர் மீது போடப்பட்ட வழக்கை ஒத்துக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

எதிரிகளும் புகார்தாரர்களும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். இரண்டு முறை சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. 02.11.2016 ம் வருடம் சம்பவம் நடந்ததற்கு 04.11.2016 ம் தேதிதான் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதற்கான காலதாமதம் குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் மருத்துவமனையில் இருந்ததால் காலதாமதமாக புகார் கொடுத்தாகக் கூறினார். நான் புகாரினைப் படித்துப்பார்த்தேன். முதல் தகவலறிக்கையை ஏட்டையா படித்துப்பார்த்தார்.

புகாரில் அனைத்துப் பக்கங்களிலும் புகார்தாரர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வெற்று தாளில் கையொப்பம் பெற்றுவிட்டு காலதாமதமாக முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இரத்தக் காயம் ஏற்பட்டதா என நான் பார்க்கவில்லை என்றால் சரிதான், 4 நாட்கள் ஆகிவிட்டதால் நான் பார்க்கவில்லை. இரத்தக்கறை படிந்த துணிகளை கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

பார்வை மகஜர் சாட்சிகள் எங்கிருக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. எதிரி தீபிகா சம்பவ சமயத்தில் கல்லூரியில் படித்துவந்ததாக எனக்குத் தெரிந்தது என்றால் சரிதான். கு.எண்.200 யும் இதே சமயத்தில்தான் நான் பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தேனா என்றால் சம்பவ இடத்தில் வைத்துதான் விசாரித்தேன். அசா.1 முதல் 6 வரையுள்ள சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் மேற்படி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அசா.1 தரப்பினர்தான் வலுக்கட்டாயமாகச் சென்று எதிரிகள் தரப்பிற்கு சென்று எதிரிகளைத் தாக்கி காயத்தை ஏற்படுத்திவிட்டு தங்கள் மீது கொடுக்கப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக முதல் புலன்விசாரணை சரிவர செய்யவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் திரு மணிமாறனிடம் அனைத்து சாட்சிகளையும் விசாரித்தப் பின்புதான் அறிக்கை கொடுத்தேன். நான் சரிவர விசாரணை செய்யாததால் குற்ற இறுதி அறிக்கை மட்டும் திரு மணிமாறன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.